MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on 30.09.2021 (Urgent)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 142 | **மன்றப்பொருள் எண்.1**<br>இந்நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.56, வார்டு சி, பிளாக் 18ல் திருமதி.சாந்தி மேலூர் என்பவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதை அகற்ற கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் திருமதி.சி.அழகம்மாள் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.No.11280/2021க்கு கவுண்டர் தாக்கல் செய்த வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக ஆஜராகிய வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன்முத்தையா என்பவருக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.9500/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.612/2020/எப்1) | அனுமதிக்கப்பட்டது. |
| 143 | **மன்றப்பொருள் எண்.2**<br>இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள தம்மை ஒப்பந்ததாராக பதிவு செய்ய வேண்டி திருமதி.அஸ்மாபேகம் என்பவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூர் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம்நிலை ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1060/இ1/2021 | அனுமதிக்கப்பட்டது. |
| 144 | **மன்றப்பொருள் எண்.3**<br>இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தம்மை ஒப்பந்ததாராக பதிவு செய்ய வேண்டி திரு.எம்.இளையராஜா என்பவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூர் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம்நிலை ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1383/இ1/2021 | |
| 145 | **மன்றப்பொருள் எண்.4**<br>மேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் வகுப்பறைகள் பள்ளிவளாகம் மற்றும் கழிப்பறைகளை சுத்தம் செய்து கிருமிநாசினி தெளிக்கும் பணியினை மேற்கொள்ள 19.01.2021 முதல் 30.04.2021 வரை 9,10,11 மற்றும் 12ம் வகுப்புகள் மட்டும் நடைபெறுவதற்கு நகர்மன்ற தீர்மான எண்.58 நாள்.26.02.2021 அனுமதி வழங்கப்பப்பட்டது. கோவிட் 19ன் காரணமாக பள்ளிகள் மூடப்பட்டு தற்பொழுது தமிழக முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீட்டில் 01.09.2021 முதல் 9,10,11 மற்றும் 12ம் வகுப்புகள் திறப்பதற்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகர எல்லைக்குட்பட்ட 3 பள்ளிகளில் தூய்மைப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், பள்ளிகள் திறக்கப்பட்டுவிட்டதாலும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய ஒப்பந்ததாரரை நியமிக்க போதிய கால அவகாசம் இல்லாததாலும் ஏற்கனவே தூய்மை பணிகளை மேற்கொண்டு வரும் திருவாளர்கள் ஜெய்சீரடிசாய் மேன்பவர் ஏஜென்சீஸ், மதுரை–16 என்ற நிறுவனத்திடம் பழைய ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள இயலுமா என சம்மதக்கடிதம் எழுத்து மூலமாக வழங்கியதால் பொதுசுகாதாரஅவசியம் கருதி மேலே குறிப்பிட்ட 3 பள்ளிகளிலும் 8 தூய்மைப்பணியாளர்களை ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியின்படி நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.420/– வீதம் பணி செய்ய மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்படும் நாள் முதுல் மூன்று மாதங்களுக்கு பணி உத்தரவு வழங்கவும், அதற்குண்டான செலவினத்தினை கல்விநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொதுசுகாதார அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 146 | **மன்றப்பொருள் எண்.5** | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சிக்கு எதிராக கூடுதல் ஊதியம் வழங்க கோரி திரு.சேவுகப்பெருமாள் மற்றும் 26 நபர்களால் மதுரை மாண்புமிகு தொழிலாளர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.C.P.No. 45/2019 வழக்கில் இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.ஜே.குணசீலன்முத்தையா அவர்களை ஆஜராகவும், மேற்படி வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/– வழங்கமன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 147 | **மன்றப்பொருள் எண்.6**<br>மேலூர் நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கும் தண்ணீர் லாரி TN59 M4864 வண்டிக்கான நடப்பாண்டிற்கான வாகன காப்பீட்டுத்தொகை ரூ.30810/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.657/2021/எச்1 | அனுமதிக்கப்பட்டது. |
| 148 | **மன்றப்பொருள் எண்.7**<br>மேலூர் நகராட்சிக்கு எதிராக தனியார் ஒப்பந்ததாரரிடம் பணியாற்றிய தூய்மைப்பணியாளர்கள், தொழிலாளர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததில் நீதிமன்ற ஆணை நாள்.30.09.2019யை அமல்படுத்தக்கோரி திரு.மதுரைவீரன் என்பவரும் (வழக்கு எண்.WP(MD)No.22579/2019) மற்றும் திரு.சுரேஷ்குமார் என்பவரும் (வழக்கு எண். WP(MD)No.23480/2019) வழக்கு தொடர்ந்ததில் தடை ஆணை பிறப்பிக்கப்பட்டு அதன்மீது அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. மேற்கண்ட நபர்களால் தொடரப்பட்ட வழக்கினை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வழக்குக் கட்டணம் ரூ.4000/–மும், வழக்கறிஞர் கட்ணடம் ரூ.16000/– நகராட்சி வழக்கறிஞர் திரு.குணசீலன் முத்தையா அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.367/2021/எச்1 | அனுமதிக்கப்பட்டது. |
| 149 | **மன்றப்பொருள் எண்.8**<br>மேலூர் நகராட்சி சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தூய்மைப்பணிகளை மேற்கொள்ள ஜெய்சீரடி சாய் மேன்பவர் நிறுவனத்தின்மூலம் 40 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். மேற்கண்ட நிறுவனத்திற்கான ஒப்பந்த காலம் வருகின்ற | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>30.09.2021 உடன் முடிவடைகிறது. கொரோனா தொற்றுநோய் பரவல் அதிகரித்து வருவதாலும், ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கோரியது குறித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு நடைபெற்று வருவதாலும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளதாலும், மேற்கண்ட நிறுவனத்தினரால் 2020–2021 ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி கேள்வித்தொகை ரூ.418.90/– என்ற தினக்கூலி அடிப்படையில் தொடர்ந்து பணிமேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளதின்பேரிலும், இந்நகராட்சியின் பொதுமக்களின் பொதுசுகாதாரப் பணியின் அவசியம் கருதியும் நிர்வாக செலவினத்தைக் கருத்தில் கொண்டும், 01.10.2021 முதல் 31.12.2021 முடிய உள்ள காலத்திற்கு ஜெய்சீரடி சாய் மேன்பவர் ஏஜென்சிக்கு ஒப்பந்தத்தை ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விகிதப்படி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>150</td>
<td>மன்றப்பொருள் எண்.9<br><br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநுழைவுக்கட்டணம் வசூல் உரிமத்திற்கு 24.09.2021ம் தேதியில் பொதுஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்ள்ளி கோரப்பட்டது. பொதுஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. ஆனால் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பெயர்/முகவரி</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை நாள். 1க்கு ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>திரு.S.V.P.முருகன்,<br>60, நாய்குடிபள்ளம்,<br>நாகம்மாள் கோவில் தெரு,<br>மேலூர்.</td><td>ரூ.450/–</td></tr>
<tr><td>2.</td><td>திரு.கே.ஆர்.அழகுபாண்டி,<br>22/34, சொக்கம்பட்டி,<br>மேலூர்</td><td>ரூ.550/–</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் உள்ளபடி நாள் 1க்கு ரூ.450x30 =13500x12 ரூ.162000/– வரிசை எண்.2ல் உள்ளபடி நாள்.1க்கு ரூ.550x30= ரூ.198000/– என உள்ளது. மேலும் பேருந்து நுழைவு கட்டணம் உரிமம் பொதுஏலம் எடுக்க ஒருவரும் முன்வராததால் கடந்த 9 வருடங்களாக அலுவலகம் மூலம் நடப்பு ஆண்டு வரை வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது. அலுவலகம் மூலம் வசூல் பணியில் ஒரு வருவாய் உதவியாளர் மற்றும் ஒரு ஒப்பந்தப்பணியாளர் ஈடுபடுத்தப்பட்டு வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

அவர்களின் மாத ஊதியம் ரூ.37000/– வீதம் ஆண்டுக்கு ரூ.444000/– ஊதியமாக வழங்கப்படுகிறது. மேலும் இரசீது புத்தகங்கள் அச்சிடுவதற்கு ஆண்டுக்கு ரூ.10000/– வரை செலவு மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் தமிழ்நாடு அரசால் 2020–2021, 2021–2022 வரை கொரோனா நோய் தடுப்பது தொடர்பாக ஊரடங்கு அமுலில் இருந்து வருவதால் அவ்வப்பொழுது பேருந்துநிலையம் இயக்கம் இல்லாததாலும், கொரோனா காலங்களில் குறைந்த அளவு பேருந்து இயக்கப்பட்டதாலும், சுமார் 50 பேருந்துகள் வரை புறவழிச்சாலையில் (Bye pass) செல்வதால் உரிமம் வசூல்செய்ய இயலாத சூழ்நிலை உள்ளதாலும், பொதுஏலம் எடுக்க கடந்த 9 ஆண்டுகளாக ஒருவரும் முன்வரவில்லை. 2021–2022ம் ஆண்டில் 6 முறை பொதுஏலம் கோரியும் 7வது முறையாக திரு.கே.ஆர்.அழகுபாண்டி ஏலத்ததாரர் ரூ.1,98,000/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே பேருந்துநுழைவுக் கட்டணம் வசூல் செய்வதின் மூலம் செலவினமாக ரூ.454000/– ஏற்படுகிறது. தற்போது ஒப்பந்தப்புள்ளி கேள்வி ரூ.198000/– நீங்கலாக நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.256000/– கூடுதல் செலவினத்தை தவிர்க்கும்பொருட்டும் பணியாளர்கள் விடுமுறை நாட்களிலும் தொடர்ச்சியாக வசூல் பணியில் ஈடுபடுவதை தவிர்க்கும்பொருட்டும் சிறப்பினமாக கருதி நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை இழப்பெனக் கருதாமல் திரு.கே.பி. அழகுபாண்டி என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கேள்வியினை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.76/2021/அ2

151

**மன்றப்பொருள் எண்.10**

அனுமதிக்கப்பட்டது.

மேலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் தட்டில் வைத்து பொறிகடலை முறுக்கு விற்பனை செய்யும் உரிமத்திற்கு 24.09.2021 ம் தேதியில் பொதுஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொதுஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. ஆனால் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பெயர்/முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை நாள். 1க்கு ரூ. |
|---|---|---|
| 1. | திரு.S.V.P.முருகன்,<br>60, நாய்குடிபள்ளம்,<br>நாகம்மாள் கோவில் தெரு, மேலூர். | ரூ.150/– |
| 2. | திரு. R.வீரமணி<br>7, நாய்குடிபள்ளம்,<br>நாகம்மாள் கோவில் தெரு, மேலூர். | ரூ.125/– |

அலுவலகக்குறிப்பு

| | | |
|---|---|---|
| | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் உள்ளபடி நாள் ஒன்றுக்கு ரூ.150X30=4500 X 12=54000/– வரிசை எண்.2ல் உள்ளபடி நாள் ஒன்றுக்கு ரூ.125 X 30=3750 X12 =45000/– என உள்ளது. ரூ.54000 அதிகமாக உள்ளது. இது கடந்த 2020–2021 குத்தகை தொகைக்காட்டிலும் ரூ.67272/–குறைவாக உள்ளது. மேலும் பேருந்து நிலையத்தில் தட்டில் வைத்து பொறிகடலை மற்றும் முறுக்கு விற்பனை உரிமம் கடந்த 2021–2022ம் ஆண்டிற்கு முதன்முதலாக 11.02.2021 முதல் 6 முறை ஏலம் கோரியும் ஒருவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. மேலும் 7வது முறையாக ஏலம் கோரியதில் திரு. S.V.P. முருகன் மட்டுமே ரூ.54000/– க்கு ஏலம் கோரியுள்ளார்<br>. மேலும் தமிழ்நாடு அரசால் 2020 –2021 முதல் 2021–2022 வரை கொரோனா நோய் தடுப்பது தொடர்பாக ஊரடங்கு அமுலில் இருந்து வருவதால் தொடர்ந்து பேருந்து நிலையம் இயக்கம் இல்லாததாலும் பேருந்து இயக்கப்படாததாலும் மேற்கூறிய பேருந்துநிலையத்தில் உள்ள அனைத்து கடைகளிலும் பூ, முறுக்கு விற்பனை செய்வதாலும் தட்டில் வைத்து பொறிகடலை/ முறுக்கு விற்பனை செய்யும் உரிமத்தினை ஏலம் எடுக்க ஒருவரும் முன்வரவில்லை.<br>மேலும் கொரோனா நோய் தொற்று தொடர்ந்து அமுலில் உள்ளதாலும், பூ மற்றும் முறுக்கு தட்டு மூலம் விற்பனை செய்யும் உரிமத்தை பல்வகை கேட்பு உரிம இனங்களிலிருந்து நீக்கம் செய்ய வேண்டிய நிலையை தவிர்க்கும் பொருட்டும் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை இழப்பெனக் கருதாமல் திரு.S.V.P.முருகன், என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கேள்வியினை மன்றம் அனுமதிக்கலாம். | |